# ஹிந்தி ஒழிப்புப் பொதுக் கூட்டம்

(நமது நிருபர்)

அய்யம்பேட்டை, ஜூன், 5.

அய்யம்பேட்டைச் சாவடி கிருஷ்ணன் கோவில் முன்பு 8-6-38 புதன்கிழமை மாலை 5-மணிக்கு சென்னை சர்க்கார் மந்திரி சபையார் கொண்டு வரவிருக்கும் கட்டாய ஹிந்திக் கல்வியை எதிர்த்து ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும்.

அக்காலை, ஹிந்தி எதிர்ப்புப் பிரசாரக் கமிட்டித தோழர்களான எஸ்- சோமசுந்தர பாரதியார் எம். ஏ. பி. எல்., ஈ. வெ. ராமசாமி, டபுள்யூ. பி. ஏ. சௌந்தர பாண்டியன், ராவ் சாகிப், த. வே உமாமகேசுவரம் பிள்ளை பி. ஏ. பி. எல்., கி. ஆ. பெ. விசுவநாதம், கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல். ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.